பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 14 உ வெள்ளிக்கிழமை (28-6-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 205

# ஈழ அகதிகளுக்கு வழங்கும் நீரில் விஷம் கலக்க முயற்சி!

## தமிழக அரசுக்கு எச்சரிக்கை

சென்னை, ஜூன் 28

தமிழகத்தில் ஈழத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாம்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் நீர்நிலைகளில் விஷத்தைக் கலக்க சிலர் முயற்சி செய்து வருகின்றனர்! ஆகவே எச்சரிக்கையாக இருங்கள்!!

—இவ்வாறு இந்திய மத்திய அரசின் வெளிவிவகாரத்துறை அவசர எச்சரிக்கைச் செய்தி ஒன்றை தமிழக மாநில அரசுக்கு அனுப்பி இருப்பதாக அறியவருகிறது.

இதனையடுத்து அகதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் நீர் நிலைகளுக்கு அதிகளவு பாதுகாப்பு வழங்கும்படியும் —

அகதிகளுக்கு வழங்கும் குடிதண்ணீரை அடிக்கடி பரிசோதனை செய்து பார்க்குமாறும் —

அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்துவிடாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படியும் —

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

சுமார் 9 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் மண்டபம் அகதி முகாமுக்கு இப்போது வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு போதுமானது அல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (உ)

## கூட்டுப்படை அலுவலகம் புதிதாக கொள்ளுப்பிட்டியில்

கொழும்பு, ஜூன் 28

கடந்த வெள்ளிக்கிழமை குண்டு வெடிப்பில் கூட்டுப்படைத் தலைமையகம் சேதமடைந்ததையடுத்து புதிய அலுவலகம் கொள்ளுப்பிட்டியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

காலி வீதியில் இந்திய தூதரக கட்டடத்துக்குச் சமீபமாக—பாதுகாப்பான இடத்தில்—இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

பொதுசனப் பிரிவு உட்பட சில பிரிவுகள் மட்டுமே அங்கு இப்போது இயங்குகின்றன என்றும் முக்கிய அதிகாரிகளும், பிரதான ஆவணங்களும் இந்த அலுவலகத்தில் இல்லை என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3)

## ரஞ்சன், ராஜீவ் கொலைகள்: மொஸாட்டின் கைவரிசை!

### புலனாய்வுக் குழு கூறுகிறது

புதுடில்லி, ஜூன் 28

ஸ்ரீலங்கா அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோர் பலியான குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமான மொஸாட் அமைப்பின் கைவரிசை இருப்பதாக இந்தியாவின் விசேட புலனாய்வுக்குழு கூறியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இது போன்ற உயர் தொழில்நுட்ப வெடிகுண்டுகளைக் கையாள் வதற்கு மொஸாட் நிறுவனம் பயிற்சியளித்துள்ளது என்றும் அக்குழு கூறியிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த தீவிரவாதக் குழுக்களுக்கு சம்பந்தம் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது என்றும் இந்திய மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் விஜய்கரண் கூறினார்.

## ராஜீவ் காந்தி கொலையில் அமெரிக்கா தொடர்பு?

### ஜெயலலிதாவின் சந்தேகம் இது

சென்னை, ஜூன் 28

''தமிழ்நாட்டில் அமெரிக்காவுக்கு மிக நெருங்கிய நண்பர்களாக உள்ளவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து விசாரித்தால், ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான சில உண்மைகள் வெளிவரக்கூடும்.''

— இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

''26 ஆம் திகதி திட்டமிட்டபடி தேர்தல் நடந்திருந்தால் இந்தியாவின் பிரதம

(3 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் விரைவில் பஸ்சேவை ஆரம்பமாகும்

### முயற்சி கைகூடும் சாத்தியம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வ. பி. போ. ச. பஸ் சேவை விரைவில் ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உருவாகியுள்ளன.

கொழும்பு சென்று வந்ததின் பின்னர் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இத்தகவலை வெளியிட்டார்.

கொழும்பில் இது தொடர்பாக பலதரப்பட்டவர்களுடனும் தாம் பேச்சு நடத்தியதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

வாரத்துக்கு 30 பரல் டீசலை மட்டும் வழங்குவதற்குக் கொள்கையளவில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும்—

இது சம்பந்தமான இறுதி முடிவு கொழும்பில் இருந்து அடுத்த வாரமளவில் அறிவிக்கப்படும் என்றும் அரச அதிபர் மேலும் சொன்னார். (ஒ-3)

## விசேட ஜி.சி.ஈ. (சா.த.) பரீட்சை:

## விண்ணப்பம் ஜூலை 31 வரை ஏற்கப்படும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான விசேட ஜி. சி. ஈ. (சாதாரணதர) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம்— ஜூலை 31ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பரீட்சை தொடர்பாக அவர் தெரிவித்த விவரங்கள் வருமாறு:

★ 1991ஆம் ஆண்டுக்குரிய ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்ட் மாதம் நடைபெறும். அந்தப் பரீட்சை சுமுகமாக நடைபெற்று முடிவடைந்த சில தினங்களில் விடுபட்டுப் போன 90ஆம் ஆண்டுக்கான விசேட ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சையை வடக்கு, கிழக்கில் நடத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் சம்மதம் தெரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆயிரம் இலங்கையரை ஜேர்மனி திருப்பி அனுப்பும்

பேர்லின், ஜூன் 28

ஜேர்மனியின் புதிய குடியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம் காரணமாக சுமார் இருபதாயிரம் இலங்கையர் அங்கிருந்து வெளியேற்றப் படுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

புதிய குடியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி, ஜேர்மனியில் அடைக்கலம் கோரியுள்ள வெளிநாட்டவர்கள் பலவந்தமாக அவரவர் நாட்டுக்குத்திருப்பி அனுப்பப் படவுள்ளனர்.

இது பற்றிய செய்தி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

ஈராக், ஈரான், லெபனான், ஆப்கானிஸ்தான், இலங்கை, எதியோப்பியா, சோமாலியா ஆகிய ஏழு நாடுகளையும் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் பேர் வெளியேற்றப்படுவர் என அறிவிக்கப்பட்டிருந்தது.

பிந்திக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், சுமார் 20 ஆயிரம் இலங்கையர் ஜேர்மனியில் அடைக்கலம் கோரியுள்ளனர் என்றும்—

அவர்கள் பாதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

## 10 லட்சம் இந்தியருக்கு எய்ட்ஸ்!

இந்தியாவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பத்து லட்சத்தை எட்டக்கூடும்.

அமெரிக்கா நாடாளுமன்ற உறுப்பினரும், எய்ட்ஸ் சம்பந்தமான நாடாளுமன்றக் குழுவின் தலைவரும், பிரபல டாக்டருமான ஜிம்மக்டெர்மோர்ட் அமெரிக்க நாடாளுமன்றில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார் (உ)

## ராணுவ அதிகாரி பதவி நீக்கம்

கொழும்பு, ஜூன் 28

கூட்டுப்படை தலைமை அலுவலக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு — கிழக்குப் பகுதி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கொள்ளைகளில் ஈடுபட்ட புலர் புலிகளிடம் சிக்கினர்

வடமாகாணத்தில் கொள்ளைகளில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் கண்ணன் என்பவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் எனப் பாவனை செய்து கொண்டு கொள்ளைகளில் ஈடுபட்ட மேலும் பலர் கைதாகியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. இவ்வாறு கைதானோர் விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

ஜெயராஜா நந்தகுமார் (கண்ணன்)—சுழிபுரம், செல்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய புலனாய்வுக் குழுவுக்கு இங்கு உதவி கிடைக்கவில்லை

கொழும்பு, ஜூன் 28

ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட விசேட புலனாய்வுக் குழுவுக்கு எத்தகைய உதவியையும் அளிக்கத் தயார் என்று ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருந்தபோதிலும், கொழும்பு சென்ற மேற்படி குழுவுக்கு ஸ்ரீலங்கா அரசு உரிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

★ ராஜீவ் படுகொலைச் சந்தேக நபர்களின் படங்களை ஸ்ரீலங்கா தொலைக் காட்சியின் தமிழ், சிங்கள, ஆங்கில செய்தித் தொகுப்பில் இடம்பெறச் செய்யுமாறு இந்தியப் புலனாய்வுக் குழு கேட்டிருந்தது. இதன் மூலம் சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும் என்று குழு கருதியது. ஆனால் ஆங்கிலச் செய்தியில் மட்டுமே சந்தேக நபர்கள் இருவரின் படங்கள் இடம்பெற்றன.

★ மாலைதீவு அதிரடிப் புரட்சியில் பங்கேற்று, கைதாகிப் பின்னர் கொழும்பில் சிறைவைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் புளொட் இயக்கத்தவர்களைச் சந்தித்துப் பேச தங்களுக்கு வாய்ப்பளிக்கும்படி இந்தியக் குழு

(3 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



## கொழும்புக் குண்டுவெடிப்பு:

## புலிகள் பிரமுகர் திலகர் கருத்துக் கூற மறுப்பு

கொழும்பு, ஜூன் 28

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகத்தின் மீது நடந்த கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து கருத்துக் கூற, பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோரன்ஸ் திலகர் மறுத்துவிட்டார்.

-இவ்வாறு கொழும்பில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது

இந்தத்தாக்குதலுக்கு தமது இயக்கம் பொறுப்பு ஏற்கின்றது என்றோ அல்லது மறுக்கின்றதோ என்றோ கருத்துக் கூற திரு. திலகர் மறுத்து விட்டார்

ஆனால் இந்தத் தாக்குதல் தமக்கு திருப்தி தருவதாக அவர் சொன்னார்.

தமிழ் மற்றும் சிங்களப் பொதுமக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவதற்கு இராணுவத் தலைமையகத்தின் இந்தக்கட்டடத்திலேயே திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அதனால் இந்தத் தாக்குதல் தமக்குத் திருப்தியளித்ததாக அவர் சொன்னார். (உ)

## முதல்வர் ஜெயலலிதாவின் பாதுகாப்புக்குகறுப்புபூனை

சென்னை, ஜூன் 28

இந்தியாவில் மிக முக்கிய தலைவர்களுக்கு மட்டும் அளிக்கப்படும்— தேசிய பாதுகாப்புப் படையின் — கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பு ... பொதுச் ... தமிழக முதல்வருமான செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கென புதுடில்லியிலிருந்து என். எஸ். ஜி. பிரிவின் பன்னிரண்டு பொலீஸ் அதிகாரிகள் சென்னை வந்து சேர்ந்தனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

05 - 06 - 91 அன்று வட்டுக் கோட்டையில் இருந்து வவுனியாவிற்கு ஒட்டோவில் பயணம்செய்யும்போது சூட்கேஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S. கிருஷ்ணமூர்த்தி சுயந்தப்பை, தெல்லிப்பளை மேற்கு எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (4174)

### மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க A/L படித்த, நிறமான, சுகதேகியான, இளமைத் தோற்றமுடைய, பொறுப்புகளற்ற விவாகரத்தான 49 வயது பெண்ணுக்கு பொறுப்புகளற்ற 52 வயதுடைய மணமகன் தேவை. மாநகரசபை எல்லைக்குள் பெறுமதியான வீடும், நகையும், பணமும் சீதனமாக கொடுக்கப்படும். தொடர்பு இல. 326, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (17349)

### விண்ணப்பப் படிவம்

கணக்காய்வுப் பரீட்சகர் IIக்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான [1991] விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள: சிலோன் மேர்ச்சன்ட்ஸ் கட்டடம், 484/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4176)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதங்களிலும் திருமண தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (4175)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை காலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். (4170)

### சோதிடம்

உங்கள் வாழ்க்கையில் எந்த வகைப் பிரச்சினையும், உங்கள் சாதகத்தை ஆராய்ந்து நிவர்த்தி செய்யப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, அரசடிச் சந்தி, நல்லூர். (17351)

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரை கலந்தாலோசியுங்கள் ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக) தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (17350)

### யந்திரம்

செவ்வாய் தோஷமுள்ளவர்களுக்கு ஆடி மாதத்தில் ஜெபிக்க வேண்டிய மங்கள சண்டி யந்திரம் விவாகத் தடையை நீக்கி இல்வாழ்வைத் தரும். சாதகத்துடன் ஜூலை 10 ஆம் திகதிக்கு முன் வரவும். விவாகம் நடைபெறா விட்டால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, நல்லூர். (17352)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ்ப்பாணக் கிளை
## வைத்தியர் தேவை

நடமாடும் வைத்திய சேவைப் பிரிவில் பணிபுரிய மருத்துவமாணி (எம். பி. பி. எஸ்), உதவி வைத்திய அதிகாரி (ஏ. எம். ஓ), பதிவு வைத்திய அதிகாரி (ஆர். எம். ஓ) தேவை தகுதியுடையோர் 6-7-1991 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி 0201)

---

# SPECIAL ENGLISH
## விசேட ஆங்கில வகுப்பு
*An Integrated Course*

ஒருங்கிணைந்த கற்கை நெறி

{ பாடசாலை விலகியோருக்கும், தொழில் பார்ப்போருக்கும் உகந்தது }

**ஆரம்பம்: 29 - 06 - 1991**

மு. ப. 9-30 a. m.

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

விசேட குறிப்பு: ஜூன் 1990 இல் மேற்படி வகுப்பில் கற்ற மாணவர்கள் தொடர்ந்தும் கற்க உரிமையுடையர்.

மேலதிக விவரங்களுக்கு:

நிர்வாகி:

*NEW SCIENCE ACADEMY*

KANNATHIDDY, JAFFNA.

(சி-0180)

---

## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை
# ENGLISH TEACHERS EXAM

போட்டிப் பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

2ஆவது பிரிவு ஆரம்பம்: 29 - 06 - 1991

9-00 a. m.

- ★ பல ஆசிரியர்களின் இணைந்த சேவை
- ★ வாராந்தம் 12 மணித்தியாலங்கள்
- ★ இலவச பாடக் குறிப்புகள்
- ★ கட்டணம் ரூபா 150-00 (முழுப் பயிற்சிக்கும்)

விவரங்களுக்கு:- நேரில்

*ASTAN* INSTITUTE

101/10, STANLEY ROAD, JAFFNA.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[0174]

---

## ஊர்வலத்தில் இவர்களும்

ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பைக் கண்டித்தும், பொருளாதாரத் தடையை நீக்கக் கோரியும், உலர் நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்கக் கோரியும் வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் குடத்தனை, பொற்பதி, நாகர்கோவில், அம்பன், குடாரப்பு, செம்பியன் பற்று, மாமுனைப் பகுதி மக்களும்கலந்து கொண்டனர்

இப் பேரணி செம்பியன் பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து ஆரம்பமாகி, மருதங்கேணிச் சந்தியை அடைந்து, உடுத்துறை மகாவித்தியாலயத்தில் இருந்து வந்த பேரணியுடன் ஒன்றிணைந்து, வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி கிழக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, மருதங்கேணி அரசினர் வைத்திய சாலை ஆகியவற்றுக்கு ஊடாக வந்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையை அடைந்தது.

---

## மரண அறிவித்தல்

### ஜெயரட்ணம் கந்தையா

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கந்தையா ஜெயரட்ணம் காலமானார்.

இவர் திருமதி பாக்கிய லட்சுமி (பூபதி) யின் அன்புக் கணவரும், டாக்டர் வரதராஜ் (லண்டன்) தர்மராஜ் (விரிவுரையாளர், பேராதனை), சித்தனா, சுதணராஜ், சுலோஜனா, கலாரஞ்ஜனி, அசோகபத்மன் (சுவிஸ்) ஆகியோரின் தகப்பனாரும், வாசுகி, நளாயினி, இராசதுரை (ஆசிரியர்) தங்கராசா (ஆசிரியர்), பாலசுப்பிரமணியம் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும்,

இராசரட்ணத்தின் சகோதரரும், நல்லம்மாவின் மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று மாலை 4 மணியளவில் கேசாவில் பிள்ளையார் கோவில் வீதியிலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

(17125)

---

# NEW MASTER INSTITUTE
B.M.C. LANE – JAFFNA.

92 A/L – PURE & APPLIED MATHS

## புதிய பிரிவு II

**ஆரம்பம்: 30-06-1991**

ஞாயிறு - காலை 11-00

- ✶ திரிகோணகணிதம் ☆
- ✶ இயக்கவியல் ☆

ஆசிரியர்: திரு. கிருஷ்ணா

(சி/0184)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 — 04 — 1920 | 28 — 06 — 1987 |

அமரர்

## சின்னத்தம்பி இராஜேந்திரம்

எங்கள் ஆசை அருமை டடா! ஆண்டுகள் நான்கு உருண்டோடி விட்டன. எத்தனை கோடி ஆண்டுகள் சென்றாலும், எங்கள் உள்ளத்தில் ஒளி வீசும் உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தை விட்டகலா! நித்தம் இறைவனிடம் வேண்டுகின்றோம்,

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

''இராஜஸ்தான்''
சின்னத்தம்பி அவெனியு,
மானிப்பாய் - தெற்கு. (17212)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 13 — 03 — 1968 | 20 — 06 — 1989 |

## பொன்னையா வசந்தகுமார்

திதி: 28 - 06 - 1991

வசந்தம் வந்தது போல் என் வாழ்வில்
வசந்தா நீ வந்தாய்! நண்பன் என்பதா
சகோதரன் என்பதா என்னவென்று
நான் சொல்ல உன் நட்பை என் வசந்தா
நீ என்னுடன் பழகிய நாட்கள் எல்லாம்
நான் நினைக்கும் போது என்னைக்
கொல்லாமல் கொல்லுதடா!
உன் புன் சிரிப்பு மாறுமுன்னே போனாயோ
என்னைவிட்டு முழுமதி உன் முகம்
மறைத்து ஈர் ஆண்டு ஓடினவோ
முப்பது வினாடி கூட உன் மறைவு
தாங்கேனடா உன்னைக் கொன்ற நஞ்சு
என்னையும் கொல்லாதோ என்று ஏங்கினேன்
பல நாட்கள் உன்னிடம் வந்த காலன்
என்னிடம் வரவில்லையே நெஞ்சினில்
விளைந்த பாசம் வதைக்குதே வசந்தா!
என்னை வஞ்சகம் அற்ற உன் முகம்
மறைந்த அன்றே துயரிலே வீழ்ந்தேனடா

உன் பிரிவால் துயருறும்:
நண்பன்
செ. சிவராஜா

சிறி ரெக்கோடிங்
ஸ்ரூடியோ,
இல. 1, நியூமாக்கற்,
கொடிகாமம். (சி/0147)

---

## நீண்ட இடைவெளிக்குப் பின்
## யாழ். நகரில் மேடையேறுகிறது

# ★ ஞானசௌந்தரி ★

( இசை நாடகம் )

காலம்: **29 - 06 - 1991** (சனி)
**30 - 06 - 1991** (ஞாயிறு)

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கம்,
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: மாலை **6-45** மணி

தயாரிப்பு:

## திருமறைக் கலாமன்றம்.

ஆசனம் விரும்புவோர் முன்கூட்டியே அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும். [0150]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வட்டத்திற்குள் குருடர்கள்

தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற உணர்வோ, முழுமையான மனவிருப்பமோ தென் இலங்கை அரசியல்வாதிகளுக்கு இன்னும் அரும்பவில்லை.

...ரான பிறப்புரிமைகளை அங்கீகரிக்கும் மனப்பக்குவம் வந்ததாகச் சிறிதும் தெரியவில்லை

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது சம்பந்தமான பிரேரணை மீது, கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் அரசு, எதிர்க்கட்சி எம். பிக்கள், அமைச்சர்கள் ஆற்றிய உரைகள் அதனையே உணர்த்துகின்றன; புலப்படுத்துகின்றன.

சிங்களவர்களும், தமிழர்களும் தமது தனித்துவங்களைப் பேணி, இரண்டு தேசிய இனங்களாக ஒரே நாட்டில் வாழ்வதற்கு வழி செய்யக்கூடிய உகந்த அரசியல் முறை சமஷ்டியே என்று எப்போதிருந்தோ புகட்டப்பட்டு வருகிறது.

அதற்கு வகை செய்யப்படாவிட்டால், இலங்கை தமிழர் தேசமாகவும், சிங்களவர் தேசமாகவும் இரண்டு நாடுகளாகப் பிளவுபடும் என்று அரசியல் வல்லுநர்கள் எப்போதோ எச்சரித்து வைத்தனர்.

அந்த எச்சரிக்கையைத்தான், இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் இப்போது நிதானத்துடன் எடுத்துரைத்து இருக்கிறார்.

ஒற்றையாட்சி முறையை அழுங்குப்பிடியாகக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தால் இரண்டு தேசங்கள் உருவாகும் என்பதை பண்டாரநாயக்கா மட்டும் தான் உணர்ந்திருந்தார். அதனால் தமிழர்களுக்கு மிகக் குறைந்த அளவிலான சுயாட்சி அதிகாரத்தையாவது வழங்குவதற்கு அவர் முன் வந்தார்.

ஆனால் அவரின் பின்னால் வந்த எந்தத் தலைவர்களுக்கும் தீர்க்க தரிசனம் இருக்கவில்லை. தன்னைப் பெரும் அரசியல் ஜம்பாவானாகக் காட்டிக் கொண்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட ஒற்றையாட்சிக்குள் சுற்றிச் சுற்றித்தான் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயன்றார். தனது அந்த முயற்சிக்கு அவர் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவைத் துணை சேர்த்த போதிலும் வெற்றி கிடைக்கவில்லை.

இந்திய அரசு தங்களுக்குச் சாதகமான ஒற்றை ஆட்சி முறைக்கு ஆதரவு தெரிவிக்கிறது என்ற காரணத்துக்காக, அதனை ஓர் ஆசீர்வாதமாக எடுத்துக் கொண்டு இலங்கை அரசு ஒற்றையாட்சித் திட்டத்திற்குள் நிற்க முனைகிறது.

ஆனால் இந்த நிலைமை — பின்புலம் — மாறக் கூடும் என்றும், இந்தியா சம்பந்தப்படாமலே தமிழீழம் உருவாகும் சாத்தியம் உண்டு என்றும் திரு. வெங்கடேஸ்வரன் எச்சரித்திருக்கிறார்.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் அதனைப் பெரிதுபடுத்தாமல் ஒற்றையாட்சி வட்டத்திற்குள்ளேயே நிற்கப் போகிறார்கள் என்பதை நாடாளுமன்ற விவாத உரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

யூகோஸ்லேவிய சமஷ்டி அமைப்பில் இருந்த ஸ்லோவேனியாவும், குரேசியாவும் பிரிந்து தனிநாடுகளாகப் பிரகடனம் செய்திருப்பது தானும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் குருட்டுக் கண்ணுக்குப் புலப்படுமா என்பது சந்தேகமே.

எப்படியோ இலங்கை என்ற நாடு ஸ்ரீலங்காவாகவும், தமிழீழமாகவும் பிளவுபடுவதற்கு அவர்களே வழி கோலுகிறார்கள்!

---

1 ஆம், 2 ஆம், 3 ஆம் தர அதிபர் பதவிகள்:

# 60 சதவீத நியமனங்கள் போட்டிப் பரீட்சை மூலம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தர அதிபர் பதவிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான புதிய திட்டம் குறித்து கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் படி போட்டிப் பரீட்சையின் புள்ளி அடிப்படையில் 60 சதவீதமானவர்களும், சேவை மூப்பு, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் 40 சதவீத மானவர்களும் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று இருந்த வெற்றிடங்களுக்கே இந்த புதியதிட்டப்படி நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சைகள் அடுத்த மாத ஆரம்பத்தில் நடைபெறவிருக்கின்றன.

சேவைமூப்பு மற்றும்சேவையில் திறமை ஆகிய அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவிருக்கின்றன. (ஒ-3)

---

ராஜீவ் காந்தி கொலையில்

## அ. தி. மு. கவின் மீது கருணாநிதிக்கு சந்தேகம்

''ராஜீவ் காந்தி கடைசியாக தமிழ் நாட்டுக்கு வந்த போது அ. தி. மு. க நடந்து கொண்ட விதத்தையும், அ. தி. மு. கவின் மூத்த தலைவர் ஒருவரின் சமீபத்திய பேச்சையும் இணைத்துப் பார்த்தால் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக அ. தி. மு. க. மீது சந்தேகம் எழுகிறது.''

—இவ்வாறு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

''நான் யாரையும் குற்றஞ் சொல்லவிரும்பவில்லை.

ஆனால் ராஜீவ் கொலைக்கு காரணமான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அனைவரும் சோர்ந்து ஈடுபடவேண்டும். ஆனால் அதற்கு மாறாக தி. மு. க தான் இந்தச் செயலைச் செய்தது என்பதுபோல் அ. தி. மு. கவினரும், இந்திரா காங்கிரஸ்காரர்களும் பேசி வருவதைப் பார்க்கும்போது எங்களுக்கும் இத்தகைய சந்தேகம் வருகிறது''— என்றார் மு. கருணாநிதி. [உ]

---

## ராஜீவ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராக ராஜீவ் காந்தி வந்திருப்பார்; அதனால் கூடிய விரைவில் உலகின் கிழக்குப் பகுதியில் மிகவும் பலமிக்க ஒரு வல்லரசாக மாறும் வாய்ப்பை இந்தியா பெற்றிருக்கும்.

ஒரே தொடர்ச்சியாக சோஷலிஸ நாடுகளை ஆதரிக்கும் வெளிநாட்டுக் கொள்கை காரணமாக அமெரிக்காவுக்கு அடிபணிந்து செல்லும் நாடாக இந்தியா இருந்ததில்லை.

அமெரிக்காவின் வெறுப்புக்கு இது ஒரு காரணம். அதனால்தான் ராஜீவ் கொலைச்சம்பவம் தொடர்பாக அமெரிக்க உளவு நிறுவனத்தின் மீது பலரின் சந்தேகப் பார்வை விழுந்திருக்கிறது.''

— இவ்வாறு செல்வி ஜெயலலிதா மேலும் தெரிவித்தார். (உ)

---

## விண்ணப்பம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

★ வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இந்தப் பரீட்சைக்கு தோற்றாதவர்களுக்கும், இடம் பெயர்ந்தவர்களுக்குமாகவே இந்த விசேட பரீட்சை நடத்தப்பட இருக்கிறது.

★ இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் கட்டணம் எதுவுமின்றி விண்ணப்பங்களை மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

★ புதிதாக விண்ணப்பம் அனுப்ப விரும்புபவர்கள் 35 ரூபா கட்டணத்துடன் விண்ணப்பிக்கலாம்.

★ பழைய பாடத்திட்டத்துக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் அந்தந்த மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு நேரில் சமுகமளித்து விண்ணப்பிக்க வேண்டும்.

★ புதிய பாடத்திட்டத்துக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தாம் கடைசியாகக் கல்வி பயின்ற பாடசாலை அதிபர்கள் மூலமாக கல்விப் பணிப்பாளர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

---

# சமஷ்டி முறைத் தீர்வு குறித்து அரசுக்குள் இழுபறி

இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறை மூலம் தீர்வு காண்பது என்பது குறித்து அரசாங்கத்திற்குள்ளேயே, அமைச்சர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகால நீடிப்புச் சம்பந்தமான விவாதத்தில் பேசிய இரண்டு அமைச்சர்களின் உரைகள் அதனையே பிரதிபலித்தன.

சமஷ்டி முறை பரிசீலிக்கப்படக்கூடிய ஒரு திட்டம் என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவும் —

ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்கு முரணான சமஷ்டி ஆட்சி முறை ஒன்று ஏற்படுத்தப்படமாட்டாது என்று அமைச்சர் விமல் விக்கிரமசிங்காவும் - தெரிவித்தனர்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினார்.

சமஷ்டிமுறையில்என்ன தவறு இருக்கிறது? தமிழீழத்துக்குக் குறைவான தீர்வு யோசனையை எவராவது முன்வைத்தால், நாட்டு நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்காக, அது குறித்துப் பரிசீலிப்பதில் என்ன தவறு இருக்கிறது?

யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளையும், வண. திஸ்ஸ பாலசூரியாவும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி முறையை ஏற்படுத்துவது குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்தது பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் முன்கண்டவாறு கேட்டார்.

ஆனால் அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா பேசும்போது, அரசியல் அமைப்புக்கு முரணாக சமஷ்டி ஆட்சி முறை ஒன்று ஏற்படுத்தப்படமாட்டாது என்று சொன்னார்.

### எதிர்ப்பார்கள்

சமஷ்டி ஆட்சி முறை ஒன்றை அரசு ஏற்படுத்தினால் அதை இந்நாட்டு மக்கள் எதிர்ப்பார்கள் - என்று சு. க. எம். பி. ஹேரம் குமாரநாணயக்கார கூறினார்.

மற்றொரு சுதந்திரக்கட்சி எம். பி யான அனுருத்த ரத்வத்த பேசும்போது -

அரசு மீண்டும் புலிகளுடன் பேசப்போவதாக அறிகிறோம். இதில் உண்மை நிலை என்ன? உண்மையில் அரசு புலிகளுடன் பேசப்போவதென்றால் எந்த அடிப்படையில் அது இடம்பெறும் என்பதை அறிவிக்க வேண்டும். இரகசியமாக எதுவும் செய்யக்கூடாது - என்றார்.

[illegible]

இரத்நாயக்கா பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்திலுள்ள படித்த, நடுநிலையான மக்கள், வடக்கு - கிழக்கில் உண்மையான பிரதிநிதிகள் ஆகியோரையும் சம்பந்தப்படுத்தி காலதாமதமின்றி இனப் பிரச்சினைக்குத் துரித தீர்வு காண வேண்டும். நாடு தொடர்ந்தும் கஷ்டங்களை அனுபவிக்க முடியாது.

தற்போதைய சர்வகட்சி மாநாட்டினால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மக்களின் உண்மையான பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. எனவே இங்கு எடுக்கப்படும் தீர்மானத்தை மக்கள் முன்னெடுத்துச் செல்வது கஷ்டம் என்கிறார்.

இனப் பிரச்சினையை தேசியப் பிரச்சினையாகக் கருதி அரசே இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க வேண்டும் - என்றார். (அ-த)

---

# தமிழர்பிரச்சினையை தீர்க்க ஜெயலலிதாபுதியயோசனை

சென்னை, ஜூன் 28

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண புதிதாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து வலியுறுத்தவிருக்கிறார்.

இத்தகவலை செல்வி ஜெயலலிதாவே செய்தியாளரிடம் தெரிவித்தார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் செயலற்றதாகி விட்டது என்றும் செல்வி-ஜெயலலிதா சொன்னார். (த-எ)

---

# தமிழ்நாட்டில் 4 இடங்களில் விரைவில் இடைத் தேர்தல்

தமிழ்நாடு சட்டசபையில் காங்கேயம் மற்றும் துறைமுகம் ஆகிய தொகுதிகளின் உறுப்பினர் பதவிகள் காலியாக உள்ளன என்று சட்டசபைச்சபாநாயகர் தமிழ்க்குடிமகன் நேற்று அறிவித்தார்:

நடந்து முடிந்த தேர்தலில் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முதலமைச்சர் ஜெயலலிதா பர்கூரை வைத்துக் கொண்டு காங்கேயம்தொகுதி உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி துறைமுகம் தொகுதி உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

இந்த இரண்டு தொகுதிகளுடன், சுயேச்சை வேட்பாளர்கள் காலமானதால் தேர்தல் நிறுத்தப்பட்ட எழும்பூர் மற்றும் முசிறி ஆகிய தொகுதிகளையும் சேர்த்து நான்கு இடைத்தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

---

## இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினர் கேட்டிருந்தனர். ஆனால் அதற்கு உதவ ஸ்ரீலங்கா அரசு மறுத்துவிட்டது.

★ அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவைப் பலி கொண்ட குண்டு வெடிப்பின் போது பயன்பட்ட வெடிமருந்து பற்றிய தகவல்களைத் தருமாறு இந்தியக் குழுவினர் ஸ்ரீலங்காவின் அரசுத் தலைமைப் பகுப்பாய்வாளரிடம் கேட்டிருந்தனர். ஆனால் அவர் இதற்கு சரிவரப் பதிலளித்து ஒத்துழைக்கவில்லை என்று தெரியவருகிறது. (உ)

---

## ராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கு ''பாஸ்'' வழங்கும் நடவடிக்கைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரியே பொறுப்பாக இருந்தாராம்.

இவர் லஞ்சம் பெற்று ''பாஸ்'' வழங்கி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே பதவி நீக்கம் செய்யப்பட்டாரென அறியவருகிறது. (ஒ-5)

---

## சந்திரசேகர் காங்கிரஸில் சேர்வாரா?

முன்னாள் பிரதமர் சந்திரசேகர் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொள்வாரா?

—இவ்வாறு புதுடில்லியில் பரவலாகச் சந்தேகம் கிளப்பப்பட்டிருக்கிறது.

ஆனால் காங்கிரஸில் சந்திரசேகர் இணையும் சாத்தியம் ஏதுமில்லை என்று முன்னாள் சட்டத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்திருக்கிறார். (உ)

---

# கடவுச்சீட்டுக்களை இங்கு எடுத்துவர அனுமதி மறுப்பு

கொழும்பில் தேங்கிக் கிடக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களது சுமார் ஆயிரத்து 300 கடவுச் சீட்டுக்களை இங்கு எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்திடம் இதற்கான அனுமதியைக் கோரியிருந்தார்.

கொழும்பு குடிவரவு-குடியகல்வுப் பிரிவு கடந்த வருடம் ஜூன் மாதத்திற்குப் பின்னர் கடவுச் சீட்டுக்களை வடக்குக்கு தபாலில் அனுப்புவதை நிறுத்திவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

---

# பதிவாளர் அலுவலகத்துக்கு "ஜெனரேற்றர்" வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். செயலக பதிவாளர் அலுவலகத்துக்குப் பயன்படுத்தவென ''ஜெனரேற்றர்'' ஒன்று கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

''போட்டோ ஸ்ரட்'' இயந்திரத்தை இயக்கவும் அந்தப் பிரிவுக்கு மின்னொளி வழங்கும் வேலைகளைத் துரிதப்படுத்தும் பொருட்டும் ''ஜெனரேற்றர்'' பயன்படுத்தப்படவுள்ளது.

நீண்டகாலமாக மின்னொளி வசதி இல்லாததால் பதிவு அலுவலக வேலைகள் பாதிக்கப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே. (ஒ-5)

---

## இந்திய தூதரக பாதுகாப்பு வீரர் மரணம்

கொழும்பு, ஜூன் 28

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த துணைப்படை இராணுவ வீரர் ஒருவர் தூதரக மாடியிலிருந்து விழுந்து மரணமானார்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் டி. எஸ். ஹேரன் வங்கியால் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

35 அடி உயரமான பாதுகாப்பற்ற மேல்மாடி ஒன்றில் கடமையில் இருந்த வேளையிலேயே அவர் தவறி விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

---

## யாருடைய பணம்?

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இருவேறு இடங்களில் தாம் கண்டெடுத்த பணத்தை அன்பர்கள் இருவர் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளனர்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சியைத் தெரிவித்து பெற்றுக் கொள்ளலாம். (அ)

---

## இந்திய மீனவரின் படகுகள் எரிப்பு?

சென்னை, ஜூன் 28

இந்திய மீனவர்களின் 4 படகுகளை இலங்கைக் கடற்படையினர் கச்சதீவுக்கு அருகில் வைத்து எரித்தனராம்.

புதுடில்லி அரசுக்கு இராமேஸ்வரம் மீனவர் சங்கம் இச்சம்பவம் தொடர்பாக முறையிட்டிருக்கிறது.

---

## தமிழ்நாடு இ. காங். தலைவர் தெரிவு

சென்னை, ஜூன் 28

தமிழ்நாடு சட்டசபை இந்திரா காங்கிரஸ் குழுவின் தலைவராக திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

---

## கொள்ளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லத்துரை பரராஜசிங்கம் (ராஜன்) — அரியாலை, பொன்னுத்துரை விஜயகுமார் (குஞ்சன்)—பண்டத்தரிப்பு, குழந்தையன் செல்வராஜா (பெரியராஜா)— சண்டிலிப்பாய், கந்தசாமி உதயேந்திரன் (அப்புலிங்கன்)— அராலி, பாலசிங்கம் திருச்செல்வம் (சின்னராசா)— சங்கானை, ஜெயராசா ஜெயக்குமார் (குமார்)— சுழிபுரம், சின்னக்குட்டி இந்திரன் (ரூபன்)— சங்கானை, கார்த்திகேசு கந்தசாமி (ஜெயம்)— மல்லாகம், சுப்பிரமணியம் சுதாகர் (சுதா)—சாவகச்சேரி ஆகியோரே கைது செய்யப்பட்டிருக்கின்றனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கடவுச்சீட்டுப் பிரிவு மீண்டும் இயங்கவுள்ளது

யாழ்ப்பாணம், ஜூன் 28
நீண்ட காலமாக இயங்காதிருந்த யாழ். செயலக கடவுச்சீட்டுப் பிரிவு மீண்டும் செயற்படவுள்ளது.

முன்னர் கைவிடப்பட்ட முறையின்படி அந்த விண்ணப்பங்கள் ஏற்கும் வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

கையேற்கப்படும் விண்ணப்பங்களை கொழும்பு தலைமையகத்துக்கு அனுப்பிவைக்க யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை —

பருத்தித்துறை துறைமுகத்துக்கு அடுத்து வரவுள்ள கப்பலில் சுமார் 4 ஆயிரம் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்கள் எடுத்துவரப்படவுள்ளன. (ஒ-5)

## கண்காட்சி

தென்மராட்சி, ஜூன் 28
சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய மாணவிகளின் தொழில்நுட்பப்பாட கண்காட்சி நேற்று வித்தியாலய மண்டபத்தில் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஒ-117)

## இராணுவம் சூடு

யாழ்ப்பாணம், ஜூன் 28
ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று அதிகாலை முதல் சுற்றுப்புறப்பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இதேவேளை காரைநகர் முகாமில் இருந்தும் பொன்னாலைப் பகுதியை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. [ஒ-15]

## சிப்பாய் காயம்

கொழும்பு ஜூன் 28
அநுராதபுரம் மாவட்டத்தில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்று இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## யூகோஸ்லேவியாவில் நெருக்கடி:

# மத்திய - மாநில படைகள் மோதும் ஆபத்து மூண்டது!

பெல்கிறேட், ஜூன் 27
சமஷ்டி அமைப்பில் இருந்து விலகி சுதந்திரப் பிரகடனம் செய்த ஸ்லேவேனியா மாநிலக் குடியரசுக்குள், யூகோஸ்லேவியாவின் இராணுவ அணிகள் டாங்கிகள் சகிதம் நேற்று நுழைந்தன.

யூகோஸ்லேவிய சமஷ்டி அரசிலிருந்த ஸ்லோவேனியா மற்றும் குறோசியா மாநிலக் குடியரசுகள் இரண்டு தினங்களுக்கு முன்னர் தன்னிச்சையாகச் சுதந்திரப் பிரகடனம் செய்தன.

இந்த மாநிலக் குடியரசுகள் இரண்டும் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தாமே மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தன.

ஆனால் அந்த சுதந்திரப் பிரகடனங்கள் சட்ட விரோதமானவை என்று யூகோஸ்லேவிய சமஷ்டி அரசு அறிவித்து, எல்லைகளைக் காப்பாற்றுமாறு இராணுவத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து சமஷ்டி அரசு இராணுவம் ஸ்லோவேனியாவுக்குள் நுழைந்துள்ளது. அதன் பின்னர் அங்கு பெரும் பதற்றம் நிலவுவதாகவும் மாநில இராணுவமும், மத்திய இராணுவமும் மோதும் அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (அ-எ)

## பரீட்சை கட்டணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
ஜி. சீ. ஈ (சாதாரண) தர பரீட்சைக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

91 ஆம் ஆண்டு புதிய பாடத் திட்டத்துக்கான விண்ணப்பக்கட்டணம் வருமாறு:-

ஒரு பாடத்துக்கு 15 ரூபா, இரு பாடங்களுக்கு 20 ரூபா, மூன்று பாடங்களுக்கு 25 ரூபா, நான்கு பாடங்களுக்கு 30 ரூபா, ஐந்து பாடங்களுக்கு 40 ரூபா, ஆறு பாடங்களுக்கு 50 ரூபா, முழுப்பரீட்சைக்கும் 50 ரூபா.

(ஒ-3)

## இடம்பெயர்ந்தோர் தபால்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28
ஊர்காவற்றுறையில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது தபால்களை யாழ். பிரதம தபாலகத்தில் இயங்கும் ஊர்காவற்றுறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டிருப்பதாக ஊர்காவற்றுறை, தபால் அதிபர் அறிவித்துள்ளார். [அ-5]

# ராஜீவ் கொலை விசாரணை; கொக்குவில்வாசியும் கைது

ராஜீவ் காந்தி கொலை சதித்திட்டத்திற்கு உடந்தையாக இருந்தார் என்ற புகாரின் பேரில் கொக்குவிலைச் சேர்ந்த ஜெயக்குமார் என்ற 29 வயது வாலிபரை மத்திய குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நேற்று முன்தினம் சென்னையில் கைது செய்தனர்.

கொலை தொடர்பாக தேடப்பட்டுவரும் ஒற்றைக்கண் சிவராசாவுக்கும் அவரது சகாக்களான சுபா, தனு ஆகியோருக்கும் தங்க இடம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜெயக்குமார் நேற்று செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை 30 நாள் பொலிஸ் காவலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

ஜெயக்குமாரையும்சேர்த்து ராஜீவ் கொலை வழக்கில் இதுவரை ஏழு பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [ஒ-எ]

## கோயிலில் திருட்டு

குருநகர், ஜூன் 28
வண்ணார்பண்ணை மேற்கு நாவலடி கற்பகவிநாயகர் ஆலயக்கதவு உடைக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றுள்ளது. (இ-51)

# யாழ். கல்வி அலுவலகத்தில் டிப்ளோமா பயிற்சிநெறி

கல்வி பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பயிற்சி நெறி முதற் தடவையாக யாழ். கல்வி அலுவலகத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கல்வி அலுவலக முகாமைத்துவ பிரிவினரால் நடத்தப்படவிருக்கும் இந்தப் பயிற்சி நெறிக்கு ஆட்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதிவரை நடத்தப்படும். இந்தப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்த 600 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் தெரிவாகும் 500 பேருக்கு இரு பிரிவுகளாகப் பயிற்சியளிக்கப்படும்.

இதுவரை காலமும் இந்தப் பயிற்சிநெறி யாழ். பல்கலைக் கழகத்தில் மட்டுமே நடைபெற்றுவந்தது. (ஒ-3)

## ஜி. சி. ஈ. சாதாரணதர

# 91 ஆம் ஆண்டு பரீட்சை விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
1991 ஆம் ஆண்டுக்குரிய ஜி. சி. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பங்கள் அனுப்பும் இறுதித்தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ் - பிராந்திய கல்விப் பணிப்பாளர் பரீட்சை ஆணையாளருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்தத் திகதி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு நடைபெறாத பரீட்சைக்கு பாடசாலை பரீட்சார்த்தியாக விண்ணப்பித்தவர்கள், குறிப்பிட்ட வயது எல்லைக்குள் இருந்தால் இந்தப்பரீட்சைக்கு புதிய கட்டணமான 50 ரூபா செலுத்தி தோற்றலாம் என்று பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-3)

## பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 28
பண்டத்தரிப்பு கல்விப் பணிமனையில் வைத்து ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சை விண்ணப்பங்கள் இன்று வெள்ளி காலை 10.00 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்துக்குள் அமைந்துள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தர வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலை அதிபர்கள் இவற்றைப் பெற்றுக் கொண்டு, இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் திருப்பி ஒப்படைக்குமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா கேட்டுள்ளார். [ஒ]

## இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
கடந்த வெள்ளிக்கிழமை உடல் முழுவதும் தீப்பற்றி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த சுண்டுக்குளியைச் சேர்ந்த கந்தசாமி சந்திரகாந்தி (வயது 30) என்ற இளம் பெண் நேற்று முன் தினம் இரவு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மரணமானவர் ஒரு மனநோயாளி என்றும், அவர் தனக்குத் தானே தீமூட்டிக் கொண்டார் என்றும் அவரது தாயார் தெரிவித்துள்ளார். (ஒ-15)


GOVERNMENT ACCOUNTANCY CLASSES

மீட்டல் பயிற்சி நெறி

ஆரம்பம்: 06 - 07 - 1991

மேலதிக விவரங்களுக்கு:

வட இலங்கை தொழில்நுட்ப கல்லூரி

(North Ceylon Technical Institute)

14, சென் பீற்றர்ஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-0136)

கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

யாழ்ப்பாணம்.

G.C.E. (A/L) 91 DAY CLASSES

ஆரம்பம்: 27 - 06 - 1991

காலை; 8-00 மணி

G.C.E. A/L 92

புதிய பிரிவு ஆரம்பம்: 29 - 06 - 1991 சனிக்கிழமை

(சி-0182)

ஆண்டு - 5

புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை

பயிற்சிப் பரீட்சையும் இலவசக் கருத்தரங்கும்

★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.

★ வாரந்தோறும் பரீட்சை + கருத்தரங்கு நடத்தப்படும்.

★ கருத்தரங்கில் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளின் பெற்றோரும் கலந்து கொண்டு தமது ஆலோசனைகளை வழங்கலாம்.

ஒவ்வொரு-

ஞாயிறு காலை 7-00 — 9-30 பரீட்சை

சனி காலை 8-00 — 9-30 கருத்தரங்கு

★ அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கட்டணங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர், பரீட்சைப் பகுதி,

BOND கல்வி நிறுவனம்,

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4179)

★ கணக்கியல் ★

A/L 90, 91 மாணவரின் நலன் கருதி

துரித மீட்டல் வகுப்பு

ஆரம்பம்: 1991 - 06 - 29 காலை 9-00 மணி

ஆசிரியர்: Mr. D. Sam

SUPER SHINE INSTITUTE

கோவில் வீதி. (17353)

அறிவித்தல்

யாழ். விஞ்ஞான மன்றமும், பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து நடாத்தும்

பனை வள ஆய்வரங்கும் கண்காட்சியும்

காலம்: 29, 30 – 06 – 1991 காலை 9-00 மணி.

இடம் : யாழ். பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஒருங்கிணைப்புக் குழு

(சி/0204)


## மரண அறிவித்தல்

### டேவின் இராஜதுரை

டேவின் இராஜதுரை இறைவனடி சேர்ந்து விட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ராணியின் அன்புத் தந்தையும், தயாநிதியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் மரண ஆராதனை 28-6-91 வெள்ளிக்கிழமை (இன்று) பிற்பகல் 3-30 மணிக்கு 23, இராஜ வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி இராஜதுரை

(17124)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org